உ

கணபதிதுணை.

அம்பலவாணக்கவிராயர்
செய்தருளிய சதுரகிரி
அறப்பளீசுரசதகம்.

இவை

குயப்பேட்டை,

வீ. இராஜுமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

பி. நா. சிதம்பரமுதலியார்
அண்டுபிரதர்ஸ் அவர்களது
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

இதன் விலை அணா-2.

R.M.M
Valliyappa Chettyar
KOTTAIYUR
Ramnad Dt.

No - 52.

உ

கடவுள் துணை.

அம்பலவாணக் கவிராயர்
செய்தருளிய சதுரகிரி

அறப்பளீசுர சதகம்.

இவை
குயப்பேட்டை
வீ. இராஜு முதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு,

சென்னை:
பி. நா. சிதம்பரமுதலியார்
அண்டுபிரதர்ஸ் அவர்களது
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1922.

இதன் விலை அணா—௨.

புனு சுகந்த எண்ணெய்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமானது மனோரஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாறிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக்கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனை நாள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இதன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அறையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,
பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,
'நாராயணவிலாஸ்'
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

அறப்பளீசுர சதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னேங்கறப்பளீசுரன்மேற்
பைம்பொருள்சேருஞ்சதகம்பாடவே!- அம்புவியோர்
ஆக்குந்துதிக்கையுளா னன்புடையர்க்கின்பருளி
காக்குந்துதிக்கையுளான் காப்பு.

உயர்பிறப்பு.

கடலுலகில்வாழுமுயி ரெழுபிறப்பினுண்மிக்க
காட்சிபெறு நரசென்மமாய்க்
கருதப்பிறத்தலரி ததிலுமுயர்சாதியிற்
கற்புவழி வருதலரிது
வடிவமுடனவயவங் குறையாதுபிழையாது
கருகலது தனிலுமரிது
வந்தாலுமிதுபுண்ய மிதுபாவமென்றெண்ணி
மாசில்வழி நிற்றலரிது
நெடியதனவானாத லரிததினிரக்கமுள
நெஞ்சின னாதலரிது
நேசமுடனுன்பதத் தன்பனாய்வருதலிந்
நீணிலத் ததினுமரிதாம்
அடியவர்க்கமுதமே மோழைபூபதிபெற்ற
வதிபனெம தருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 1

மனையாட்டிச் சிறப்பு.

கணவனுக்கினியளாய் ம்ருதுபாஷியாய்மிக்க
கமலைநிக ரூபவதியாய்க்
காய்சினமிலாளுமாய கோய்பழியிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்

மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்னை
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமாமற்கிதஞ் செய்பவளுமாய்வாசல்
வருவிருந் தோம்புபவளாய்

இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தி
யென்பெய ரிலாதவளுமாய்
யிரதியெனவேலீலை புரிபவளுமாய்பிறர்த
மிவ்வழியிலா தவளுமாய்

அணியிழையொருத்தியுண் டாயினவள்கற்புடைய
ளாகுமெமதருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

நன்மக்கட்பேறு.

தங்குலம்விளங்கிடப் பெரியோர்கள்செய்துவரு
தருமங்கள் செய்துவரலுங்
தன்மமிகுதானங்கள் செய்தலுங்கனயோக
சாதக னெனப்படுதலும்

மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழி
மறுதுவழி பாடுசெயலும்
வழிவழிவருத்தமது தேவதாபத்திபுரி
மார்க்கமுந் தீர்க்காயுளும்

இங்கிதகுணங்களும் வித்தையும்பத்தியு
மீகையுஞ் சன்மார்க்கமு
மிவையெலாமுடையவன் புதல்வனுமவனையே
யீன்றனன் புண்யவானும்

அங்கசவிரோதியே சோதியேநீதிசே
ரரசனென்ம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 2

சகோதரரொருமை.

கூடப்பிறந்தவர்க் கெய்துதுயர்தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுகமெனக்
கொண்டுதாந்தேடுபொரு ளவர்தேடுபொருளவர்
கோதில்புகழ் தம்புகழெனத் [கொள்

தேடுற்றவவர்நிந்தை தந்நிந்தைதந்தவந்
தீதிலவர் தவமாமெனச்
சீவனொன்றுடல்வே றிவர்க்கென்னவைந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்

கூடுற்றவிரையெடுத் தோளுடனிறைத்திடுங்
கொள்கைபோற் பிரிவின்றியே
கூடிவாழ்பவர்தம்மை யேசகோதரரெனக்
கூறுவதுவே தருமமாம்
ஆடிச்சிவந்தசெந் தாமரைப்பாதனே
யண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

சற்குருவியல்பு.

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தாசார
விவரவிஞ் ஞானபூர்ண
வித்யாவிசேஷசற் குணசத்யசம்பன்ன
வீரவைராக்ய முக்ய

ாதாரணப்பிரிய யோகமார்க்காதிக்ய
சமாதிநிஷ் டானுபவராய்ச்
சட்சமயநிலைமையும் பரமந்த்ரபரதந்த்ர
தருமமும் பரசமயமும்

நீதியி லுணர்ந்துதத் துவமார்க்கராய்ப்பிரம
நிலைகண்டு பாசமிலராய்
நித்தியானந்தசை தன்யராயாசையறு
நெறியுளோர் சற்குருவராம்

ஆதாரமாயுயிர்க் குயிராகியெவையுமா
மமலவெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 5

நன்மாணாக்கரியல்பு.

வைதாலுமோர்கொடுமை செய்தாலுமோசீறி
மாறாதிகழ்ந் தாலுமோ
மனதுசற்றாகிலுங் கோணாதுநாணாது
மாதாபிதா வெனக்குப்

பொய்யாமனீயென்று கனிவொடும்பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவியும்
புனிதவுன்றனதெனத் தத்தஞ்செய்திரவுபகல்
போற்றிமலரடியில் வீழ்ந்து

மெய்யாகவேபரவி யுபதேசமதுபெற
விரும்புவோர் சற்சீடராம
வினைவேரறும்படி யவர்க்கருள்செய்திடுவதே
மிக்கதேசிகரது கடன்

ஐயாபுரம்பொடி யடச்செய்தசெம்மலே
யண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதிள்னை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

பொருள் செயல்வகை.

புண்ணியவசத்தினாற் செல்வமதுவரவேண்டும்
பொருளைரட் சிக்கவேண்டும்
புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்

உண்ணவேண்டும்பின்பு நல்லவஸ்திராபரண
முடலிற் றரிக்கவேண்டு
முற்றபெரியோர்கவிஞர் தமராதுலர்க்குதவி
யோங்குபுகழ் தேடவேண்டும்

மண்ணில்வெகுதருமங்கள் செயவேண்டுமுயர்மோக்ஷ
வழிதேடவேண்டு மன்றி
வறிதிற்புதைத்துவைத் தீயாதபேர்களே
மார்க்கமறியாக் குருடராம்

அண்ணலேகங்கா குலத்தலைவன்மோழைதரு
மழகனெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. ௭

தீவழிவிலக்கு.

வஞ்சகர்தமைக்கூட மருவொணாதன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவரிடத்திலும் புரியொணாதறிவிலா
மடையர்முன் னிற்கொணாது

கொஞ்சமெனுந்தீது செய்யொணாதொருவர்மேற்
குற்றஞ்சொலொண்ணாதயற்
கோதையர்களோடுபரி காசஞ்செய்யொண்ணாது
கோளுரைகள் பேசொணாது

நஞ்சுதருமரவொடும் பழகொணாதிருள்வழி
நடந்துதனி யேகொணாது
நதிபெருக்காகிநதி னீஞ்சல்செய்யொண்ணாது
நல்வறிமறக் கொணாது

அஞ்சாமலரசர்முன் பேசொணாதிவையெலா
மறியுமெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. [illegible]

ஒன்றற்கொன்றழகு செய்வன.

வாழ்மனைதனக்கழகு குலமங்கைகுலமங்கை
வாழ்வினுக் கழகுசிறுவர்
வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு
மாநிலத்துதிசெய் குணமாம்

சூழ்குணமதற்கழகு பேரறிவுபேரறிவு
தோன்றிடி லதற்கழகுதான்
தூயதவமேன்மையுப காரம்விரதம்பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்

தாழ்தல்பணிவிடைபுரிதல் சீலநேசங்கருணை
சாற்றுமிவை யாமென்பர்காண்
கௌரிமலரோனமரர் முனிவர்முச்சுடரெலாஞ்
சரணமெமை ரட்சியெனவே

ஆழ்கடலுதித்துவரு விடமுண்டகண்டனே
யண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. ௧

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை.

கோவில்லாதவூர் நாசியில்லாமுகங்
கொழுநனில்லாத மடவார்
குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர்
குஞ்சரமி லாதசேனை

காவலில்லாதபயிர் பாலரில்லாதமனை
கதிர்மதியி லாதவானம்
கவிஞரில்லாதசபை சுதிலயையிலாதபண்
காவலரிலாத தேசம்

ஈவதில்லாததன நியமமில்லாதசெப
மிசைலவண மில்லாதவூ
ணிச்சையில்லாதபெண் போகநலமிவைதம்மி
னேதுபலனுண்டு கண்டாய்

ஆவியனையாட்கிடந் தந்தவாகற்பதரு
வாகுமெம தருமைமதவே
ளனுனமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 10

ஒன்றற்கொன்று தகாதசேர்க்கை.

பூததயையில்லாத லோபியரிடத்திலே
பொருளையருளிச் செய்தனை
புண்ணியஞ்செய்கின்ற சற்சனரிடத்திலே
பொல்லாத மிடிவைத்தனை
நீதியகன்மூடர்க் கருந்ததியெனத்தக்க
நெறிமாதரைத்தந்தனை
நிதானமுளவுத்தமர்க்கிங்கிதமிலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை
சாதியிலுயர்ந்தபே ரீனர்பின்னேசென்று
தாழ்ந்துபரவச் செய்தனை
தமிழருமையறியாத புல்லற்மேற்கவிவாணர்
தாம்பாட வேசெய்தனை
ஆதரவிலாமலிப் படிசெய்ததென்சொலா
யமலவெம தருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 11

குணக்கேட ரியல்பு.

மாருதகலைகற்று நிலைபெற்றசபையிலே
வாயிலா தவனொருபதர்
வாள்பிடித்தெதிரிவரி னோடிப்பதுக்கிடு
மனக்கோழை தானொருபதர்
ஒருவழக்குரைத் தனைவருஞ்சீசீயென்
றிகழநிற்பவ னொருபத
ரில்லாள்புறஞ்செலச் சம்மதித்தவளோ
டிணங்கிவாழ் பவனொருபதர்
வேறொருவர்மெச்சாது தன்னையேதான்மெச்சி
வீண்பேசு வானொருபதர்

M.P.M.R,M.M

வேசையர்களாசைகொண் டுள்ளளவுமனையாளை
விட்டுவிடுவா ரொருபதர்
ஆறாத துயரையும் மிடியையுந்தீர்த்தருள்செ
யமலவெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 12

செயத்தக்கவை.

வாலீபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற
வழியிலே நிற்கவேண்டும்
கலைகடறிரிந்துபொரு டேடவேண்டுந்தேடி
வளரறஞ் செய்யவேண்டும்

சீலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல்
செய்யாதிருக்க வேண்டும்
செந்தமிழ்ப்பாடல்பல கொள்ளவேண்டுங்கொண்டு
த்யாகங்கொடுக்க வேண்டும்

ஞாலமிசைபலதரும நாட்டவேண்டும்நாட்டி
நன்றாய் நடத்தவேண்டும்
நம்பனிணையடிபூசை பண்ணவேண்டும்பண்ணி
னாளுமிகு பத்திவேண்டும்

ஆலமமர்கண்டனே பூதியணிமிண்டனே
யனகவெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 13

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிரவாது சீவனஞ்செய்பவன்
சாமார்த்திய முளபுருடனுஞ்
சந்ததம்பதின்மரைக் காப்பாற்றுவோன்மிக்க
தரணிபுகழ் தருதேவனும்

பொன்மட்டிலாமலீந் தொருநூறுபேரைப்
புரப்பவன் பொருவிலிந்திரன்

புவிமீதிலாயிரம் பேர்தமைக்காப்பாற்றும்
புண்யவானே பிரமனும்
நன்மைதருபதினாயிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்பவன் செங்கண்மா
லுமிவன்மேலதிக மாகவெகுபேர்க்குதவு
நரனேமகாதேவனும்
அன்மட்டுவார்குழலி பாகனேயேகனே
யண்ணலேம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 14

செயற்கருஞ்செயல்.

நீர்மேனயக்கலா தெட்டியுந்தின்னலா
நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெருவேங்கையைக் கட்டியேதழுவலா
நீளரவினைப் பூணலாம்
பார்மீதுமணலைச் சமைக்கலாஞ்சோறெனப்
பட்சமுடனே யுண்ணலாம்
பாணமொடுகுண்டுவில கச்செய்யலாமரப்
பாவையைபேசப் பண்ணலாம்
ஏர்மேவுகரடியுங் கடையுற்றுவெண்ணையு
மெடுக்கலாம் புத்திசற்று
மில்லாதமூடர்த மனத்தைத்திருப்பவே
யெவருக்குமுடியாதுகாண்
ஆர்மேவுகொன்றைபுனை வேணியர்சுரர்பரவு
மமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 15

உத்தமராவோர்.

செய்நன்றிமரவாதபேர்களும் மொருவர்செய்
தீமையை மறந்தபேருந்
திரவியந்தரவறினு மொருவர்மனையாட்டிமேற்
சித்தம்வை யாதபேரும்

ஆயுமறிவாளர்பணி பாதனேபோதனே
யண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 19

திருமங்கையிருப்பிடம்.

நற்பரிமுகத்திலே மன்னவரிடத்திலே
நாகரிகர் மாமனையிலே
நளினமலர் தன்னிலே கூவிளந்தருவிலே
நறைகொண்ட பைந்துளவிலே
கற்புடையர்வடிவிலே கடலிலேகொடியிலே
கல்யாண வாயிறனிலே
கடிநகரிடத்திலே நற்செந்நெல்விளைவிலே
கதிர்பெறு விளக்கதனிலே
பொற்புடையசங்கிலே மிக்கோர்கள்வாக்கிலே
பொய்யாத பேர்பாலிலே
பூந்தடந்தன்னிலே பாற்குடத்திடையிலே
போதரத் தின்சிரசிலே
அற்பெருங்கோதைமலர் மங்கைவாழிடமென்ப
ரண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 20

மூதேவியிருப்பிடம்.

மிதமின்றியன்னம் புசிப்போரிடத்திலும்
மிகுபாஷை யோரிடத்தும்
மெய்யொன்றிலாமலே பொய்பேசியேதிரியு
மிக்கபா தகரிடத்தும்
கதியொன்றுமிலர்போல மலினங்கொளும்பழைய
கந்தையணி வோரிடத்துங்
கடுநாயெனச்சீறி யெவரைஞ்சேர்க்காத
கன்னிவாழ் மனையகத்தும்

தறிசேர்கடத்திலுங் கர்த்தபத்திடையிலுஞ்
சார்ந்தவாட்டின் றிரளினுஞ்
சாம்பிணமுகத்திலு மிவையெலாங்கவலைபுரி
தௌவைவா ழிடமென்பர்காண்
அதிருபமலைமங்கை நேசனேமோனந்தரு
மழகனெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 21.

குறைகுணமிரண்டினும் பயன்படாதவை.

குணமற்றபேய்முருங் கைத்தழைதழைத்தென்ன
குட்டநோய் கொண்டுமென்ன
குரைக்கின்றநாய்மடி சுரந்தென்னகரவாது
கொஞ்சமாய்ப் போகிலென்ன
மணமற்றசெம்முருக்கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகிலென்ன
மதுரமில்லாவுவர்க் கடனீர்கறுத்தென்ன
மாவெண்மை யாகிலென்ன
உணவற்றபேய்ச்சுரை படர்ந்தென்னபடரா
துலர்ந்துதான் போகிலென்ன
வுதவாதபேர்க்குவெகு வாழ்வுவந்தாலென்ன
வோங்குமிடி வரிலென்னகாண்
அணியுற்றபைங்கொன்றை மாலிகாபரணனே
யாதியே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 22

குறைவுற்றுங் குணங்கெடாமை.

தறிபட்டசந்தணக் கட்டைபழுதாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபார்சுவரிடக் காய்ச்சினுமதுகொண்டு
சாரமதுரங் குறையுமோ

அள்ளாதிருங்கருணை யாளனேதேவர்தொழு
மாதியேயருமை மதவே
ளனுதினமுமனதினினை சருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 26

நற்குணங்களுக் கிடமாகாதவர்.

வெறிகொண்டமற்கடம் பேய்கொண்டுகள்ளுண்டு
வெங்காஞ் சொறிப்புதனிலே
வீழ்ந்துதேள்கொட்டிடச் சந்மார்க்கமெள்ளளவு
மேவுமோ மேவாதுபோல்
குறைகின்றபுத்தியா யதிலற்பசாதியாய்க்
கூடவேயிளமை யுண்டாய்க்
கொஞ்சமாமதிகார முங்கிடைத்தான்மிக்க
குவலயந் தனிலவர்க்கு
நிறைகின்றபத்தியுஞ் சீலமும்மேன்மையு
நிதானமும் பெரியோர்கண்மே
னேசமுமீகையு மிவையெலாங்கனவிலு
நினைவிலும் வாராதுகண்டாய்
அறைகின்றசுருதியின் பொருளெலாம்வள்ளலே
யண்ணலெமதருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 2

இதனாலின்ன முறையனாமெனல்.

தன்னால்முடிக்கவொண் ணாதகாரியம்வந்து
தான்முடிப்போன் றமையனாந்
தன்தலைக்கிடம்வந்த போதுபூட்டுதவுவோன்
றாய்தந்தை யென்னலாகும்
ஒன்னார்செயும்கொடுமை யான்மெலிவுவந்தபோ
துதவுவோ னிட்டதெய்வம்
யுத்திபுத்திகள்சொல்லி மேல்வருங்காரிய
முரைப்பவன் குருவென்னலாம்

எந்நாளும்வருநன்மை தீமைதனதென்னவே
யெண்ணிவரு வோன்பந்துவா
மிருதசமறிந்துதன் சொற்படிநடக்குமவ
னெவனெனினு மவனேசுதன்
அந்நாரமும்பணியு மெந்நாளுமேபுனையு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 28

அவரவரிடத்து நடக்குமுறை.

மாதாபிதாவினுக் குள்ளன்புடன்கனிவு
மாறாத நல்லொழுக்கம்
மருவுகுருவானவர்க் கினியவுபசாரமுள
வார்த்தைவழி பாடடக்கம்
காதலர்கருங்கண்மனை யாடனக்கேசயன
காலத்தினய பாஷணங்
கற்றபெரியோர்முதியர் வருமாதுலர்க்கெலாங்
கருணைசே ரருள்விதானம்
நீதிபெறுமன்னவரிடத்ததிகபயவினைய
நெரியுடைய பேர்க்கிங்கிதம்
நேயமுளதமர்தமக் ககமகிழ்வுடன்பரிவு
நேரலரிடத்தில் வயிரம்
ஆதிமனுநூல்சொலும் வழக்கமிதுவாகுமென
ஐயனேயருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 29

குணத்தைவிட்டுக் குற்றத்தைக்கவர்தல்.

துட்டவிகடக்கவியை யாருமேமெச்சுவார்
சொல்லுதற் கவியைமெச்சார்
துர்ச்சனர்க்ககமகிழ்ந் துபசரிப்பார்வருந்
தூயரைத்தள்ளி விடுவார்

இட்டமுளதெய்வந் தனைக்கருதிடார்கறுப்
பென்னிலோ போய்பணிகுவா
ரீன்றதாய்தந்தையைச் சற்றுமதியார்வேசை
யென்னிலோ காலில்வீழ்வார்
நட்டலர்தங்களுக் குள்ளானபந்துவரி
னன்றாகவே பேசிடார்
நாளுமொப்பாரியாய் வந்தபுத்துறவுக்கு
நன்மைபலவே பேசிடார்
அட்டதிசைசூழ்புவியி லோங்குகலிமகிமைகா
ணத்தனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 39

குணங்காண் குறி.

கற்றோர்களென்பதைச் சீலமுடனேசொலுங்
கனவாக்கினாற் காணலாங்
கற்புளாரென்பதைப் பார்க்கின்றபார்வையொடு
கானடையினுங் காணலாம்
அற்றோர்களென்பதைப் பூததயையென்னுநிலை
வடக்கத்தினா லறியலா
மறமுளோரென்பதைப் பூததயையென்னுநிலை
யதுகண்டு தானறியலாம்
வித்தோங்குபயிரைக் கிளைத்துவருதுடியினால்
விளையுமென்றே யறியலாம்
வீரமுடையோரென்ப தோங்கிவருதைரிய
விசேடத்தினா லறியலாம்
அத்தாகுணத்தினாற் குலநலங்தெரியலா
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 31

கூடிற்பயன்படல்.

செத்தைபலகூடியொரு கயிறாயினதுகொண்டு
திண்கரியை யுங்கட்டலாந்
திரந்தபலதுளிகூடி யாறாயின்வாவியொடு
திரளேறி நிறைவிக்கலாம்
ஒத்தநுண்பஞ்சுபல சேர்ந்துநூலாயிடி
னுடுத்திடுங் கலையாக்கலா
மோங்கிவருகோலுடன் சிலையுங்கூடினா
லுயர்கவிகை யாக்கொள்ளலாம்
மற்றுமுயர்தண்டுலத் தோடுதவிடுமிகூடின்
மலகுமுளை விளைவிக்கலாம்
மணமொத்தநேயமொடு கூடியொருவர்க்கொருவர்
வாழ்ன்மிகு வெற்றிபெறலாம்
அற்றகனியைப்பொருத் தரிபிரமர்தேடரிய
வமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 32

அததற்கு வெற்றியிடம்.

கலைவலாருக்கதிக சமயமதுரவாக்கிலே
காமுகர்க் கதிகசயமோ
கைப்பொருளிலேவரு மருத்துவர்க்கோசயங்
கைவிசேடந் தன்னிலே
நலமுடையவேசையர்க் கழகிலேயரசர்க்கு
நாளும்ரண சூரத்திலே
நற்றவர்க்கதிகசய முலகுபுகழ்பொறையிலே
ஞானவேதியர் தமக்கோ
குலமகிமைதன்னிலே வைசியர்க்கோசயங்
கூறிய துலாக்கோலிலே
குற்றமில்லாதவேளாளருக்கேசயங்
குறையாத கொழுமுனையிலே

அலையில்குதிரைக்குநடை வேகத்திலதிகசெய
மாமென்ப ரருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 33

ஒன்றனில்லாமையாற் பகழ்படல்.

தாம்பூலதாரண மிலாததேவருபூர்ண
சந்த்ரனிகர் முகசூனியஞ்
சற்சனரிலாததே வெகுசனஞ்சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர்சூனியம்
மேம்பாடிலாதமன் னவர்கள்வந்தாள்வதே
மிக்கதேசச் சூனியம்
மிக்கசற்புத்திர னிலாததேகலமான
வீறுசேர் க்ரகசூனியம்
சோம்பாததலைவரில் லாததேவளமுடன்
சொல்லுயர் சபாசூனியந்
தொல்லுலகிலெவர்க்கு மாநிதியமில்லதே
சுத்தசூனிய மென்பர்காண்
ஆம்பல்வதனத்தனைக் குகனையீன்றருள்செய்த
வத்தனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 34

மூடர் தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்ற மூடருந்தந்தைதாய்
புழைபுறஞ் சொலுமூடரும்
பெரியோர்கள்சபையிலே முகடேறிவந்தது
பிதற்றிடும் பெருமூடரும்
பண்புற்றசுற்றஞ் சிரிக்கவேயிழிவான
பழிதொழில் செய்திடுமூடரும்
பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்றுபின்புபோய்ப்
பரதவித் திடுமூடரும்
கண்கெட்டமாடென்ன வோடியிரவலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூடரும்

கற்றறிவிலாதமுழு மூடருக்கிவரெலா
காண்மூட ரறைமூடர்காண்
அங்கட்டநாவலர்க்காகவேதா துபோ
மையனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 35

இதற்கிது வேண்டுமெனல்.

தனக்குவெகுபுத்தியுண் டாகினும்வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டுந்
தானதிகசூரனே யாகினுங்கூடவே
தளசேகரங்கள் வேண்டும்
கனக்கின்றவித்துவா னாகினுந்தன்னினுங்
கற்றோரை நத்தவேண்டுங்
காசினியையொருகுடையி லாண்டாலும்வாசவிற்
கருத்துள்ள மந்திரிவேண்டும்
தொனிக்கின்றசங்கீத சாமார்த்யனாகினுஞ்
சுதிகூட்ட வொருவன்வேண்டுஞ்
சுடர்விளக்காயினு நன்றாய்விளங்கிடத்
தூண்டுகோ லொன்றுவேண்டும்
அனற்கண்ணனேபடிக சங்கநிகர்வண்ணனே
யையனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 36

வறுமையின் கொடுமை.

மேலானசாதியி லுதித்தாலுமதிலென்ன
வெகுவித்தை கற்றுமென்ன
மிக்கவதிரூபமொடு சற்குணமிருந்தென்ன
மிகுமானி யாகிலென்ன
பாலானமொழியுடைய னாயென்னவாசார
பரனாயிருந்துமென்ன
பார்மீதுவீரமொடு ஞானவானாயென்ன
பாக்கியமிலாதபோது

வாலாயமாய்ப்பெற்ற தாயஞ்சலித்திடுவள்
வந்தசுற்றமு மிகழுமே
மரியாதையில்லாம லனைவரும்பேசுவார்
மனைவியுந் தூறுசொல்வாள்
ஆலாலமுண்டகனி வாயனேநேயனே
யனகனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

ஈனத்துவம்.

இரப்பவன்புவிமீதி லீனனவனுக்கில்லை
யென்னுமவ னவனிலீன
னீகின்றபேர்தம்மை யீயாமலேகலைத்
திடுமூட னவனிலீனன்
உரைக்கின்றபேச்சிலே பலனுண்டெனக்காட்டி
யுதவிடா னவனிலீன
னுதவவேவர்க்குரைத் தில்லையென்றேசொலு
முலுத்தனே வவனிலீனன்
பரக்கின்றயாசகர்க் காசைவார்த்தைகள்சொலிப்
பலகா லலைந்துதிரியப்
பண்ணியேயில்லையென் றிடுகொடியபாவியே
பாரிலெல்லோர்க்குமீனன்
அரசிதழ்க்குமுதவாயுமைகேசனேயெளிய
ரமுதனேயருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்.

சென்மிக்கவருடமு முண்டானவத்தமுந்
தீதிலாகிரகச் சாரமுந்
தின்றுவருமௌடதமும்மேலானதேசிகன்
செப்பிய மகாமந்த்ரமும்

புன்மையவமானமுந் தானமுங்பைம்பொனணி
புனையுமடவார் கலவியும்
புகழ்மேவுமானமும் மிவையொன்பதுந்தமது
புந்திக்குளே வைப்பதே
தன்மமென் றுரைசெய்வ ரான்றார்கருத்தையுந்
தன்பிணியையும் பசியையும்
தான்செய்தபாவமும் மிவையெலாம்வேறொருவர்
தன்செவியில் வைப்பதியல்பாம்
அன்மருவுகண்டனே மூன்றுலகுமீன்றவுமை
யன்பனேயருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 39

தேவர்கள் காலவளவை.

சதுர்யுகமோரிரெண் டாயிரம்பிற்படிற்
சதுமுகற்கொரு தினமதாஞ்
சாற்றுமித்தினமொன்றி லேயிந்த்ரபட்டங்க
டாமுமீரேழ் சென்றிடும்
மதிமலியுமித்தொகையி னயனாயு ணூறுபோய்
மாண்டபோ தொருகற்பமாம்
மாறிவருகற்பமொரு கோடிசென்றானெடிய
மாறனக்கோர் தினமதாம்
துதிபரவுமித்தொகையி லொருகோடிநெடியமா
றோன்றியே போய்மறைந்தா
றோகையோர்பாகனே நிநகைத்தணிமுடி
துலங்கிடுங் காலமென்பார்
அதிகமுளபலதேவர் தேவனேதேவர்கட்
கரசனேயருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 40

தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்.

வாம்பரிதனக்கதிக புனிதமுகமதனிலே
மறையவர்க் குயர்புனிதமோ
மலரடியிலேபுனித மொளிகொள்கண்ணாடிக்கு
மாசின்முற் புறமதனிலே
மேம்படும்பசுவினுக் குட்பிற்புறத்திலே
மிக்கமட மாதருக்கோ
மேனியெல்லாம்புனித மாகுமாசௌசமொடு
மேவுவனி தையர்தமக்குப்
தாம்பிரமதற்குமிகு டுவெள்ளிவெண்கலமயந்
தங்கமீயந் தமக்குந்
தரும்புனிதம்வருபெருக் கொடுபுளிசுணஞ்சாம்ப
சாருமண் டாதுசரணம்
ஆம்புனிதமிவையென்பர் மாமேருவில்லியே
யனகனே யருமைமதவே
ளனுதினமுமனை தினினே தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

அடங்காதவற்றை யடக்குமுபாயம்.

கொடியபொலியெருதையிரு மூக்கினுங்கயிரொன்று
கோத்துவச விர்த்திகொள்வார்
குவலயந்தனின்மதக் களிறதனையங்குசங்
கொண்டுவர விர்த்திகொள்வார்
படியில்விடவரவைமந் திரதந்திரத்தினாற்
பற்றிவச விர்த்திகொள்வார்
பாய்பரியைநெடியகடி வாளமதுகொடுநகை
பழக்கிவச விர்த்திகொள்வார்
விடமுடையதுட்டரைச் சோர்பந்துகைக்கொண்டு
வீசிவர விர்த்திகொள்வார்
மிக்கபெரியோர்களுங் கோபத்தையறிவால்
விலக்கிவச விர்த்திகொள்வார்

அடியவர் துதிக்கவரு செந்தாமரைப்பதத்
தையனை யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 42

ஒளியினுயர்வு.

செழுமணிக்கொளியதன் மட்டிலேயதினுமோ
செய்யகைச் சோலமெனவே
செப்பிடுங்கிருமிக்கு மிச்சமொளியதனினுந்
தீபத்தினொளி யதிகமாம்
பழுதிலாத்தீவர்த்தி தீபத்தினதிகமாம்
பகல்வர்த்தி யதிலதிகமதிலுமோ
பாரமத்தாப்பினொளி யதிலதிகமதிலுமோ
பணிமதிக் கொளியதிகமாம்
விழைவுதருபரிதிக்கு மனுநீதிமன்னர்க்கும்
வீரவித ரணிகருக்கும்
மிக்கவொளிதிசைதோறும் போய்விளங்கிடுமென்ன
விரகுளோ ருரைசெய்குவார்
அழல்விழிகொடெரிசெய்து மதனவேடனைவென்ற
வண்ணலை யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 43

குணங்குற்றமாதல்.

வான்மதியைநோக்கிடிற் சோரர்காமுகருக்கு
மாருத வல்விடமதாம்
மகிழ்நன்றனைக்காணி லிதமிலாவிபசரிய
மாதருக்கோ விடமதாம்
மேன்மைதருநற்சுவை பதார்த்தமுஞ்சுரரோக
மிக்கபேர்க் கதிகவிடமாம்
வித்தியாதிபர்தமைக் கண்டபோததிலோப
வீணர்க்கெலாம் விடமதாம்
கனமிகுபுன்கவி வலோர்க்கதிகசபைகாணி
லேலாத கொடியவிடமா

மேற்றமில்லாதபடு பாவிகட்கறமென்னி
லெந்நாளு மதிகவிடமாம்
ஆனதவயோகியர்க ளிதயதயாமறையுறையு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 44

உயர்வன்றித்தாழ்வும் சிறக்குமிடம்.

வெகுமானமாகிலு மவமானமாகிலு
மேன்மையோர் செய்யிலழகாம்
விரகமேயாகிலுஞ் சரசமேயாகிலும்
விழைமங்கை செய்யிலழகாம்
தருதாழ்வுவாழ்வுவெகு கருமங்களைச்செய்து
சாரலோர் பேரழகதாம்
சீரத்திலேயருமை தியானமெதுவாகிலுஞ்
சுமர்செய்து வரிலழகதாம்
நகமேவுமதகரியி லேறினுந்தவறினு
நாளுமதுவோ ரழகதாம்
நாய்மீதிலேறினும் வீழினுங்கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர்காண்
அகமாயுநற்றவர்க் கருள்புரியுமையனே
யாதியே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 45

நல்வினைசெய்தோர்.

சரணெனக்காத்தவன் மெய்யினால்வென்றவன்
றானமீளை யாதுகாத்தோன்
றந்தைசொன்மறாதவன் முன்னவற்காணவன்
றாய்பழி துடைத்த நெடியோன்
வருபிதிர்க்குதவினோன் றெய்வமேதுணையென்று
மைந்தன்மனைவியை வதைத்தோன்

மாறனை தந்தையைத் தமையனைப் பிணைமுகமாடு
மாய்த்துலகின் மகிமைபெற்றோன்
கருதரியசிபியரிச் சந்திரன்மாபலி
கணிச்சியோன் சமுத்திரைசதன்
கருடன்பகீரத னுடன்சிறந்தொண்டனெறி
கானவன் பிரகலாதன்
அரியவல்விபீஷண னெனுமகாபுருடரா
மத்தனே யருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 40

தீவினைசெய்தோர்.

வாயிகழ்வுபேசிமிகு வாழ்விழந்தோன்சிவனை
வைதுதன் றலைபோயினோன்
மற்றொருவர்தாரத்தி லிச்சைவைத்துடலெலா
மாறாத வடுவாயினோன்
தாயத்தினோர்க்குள்ள பங்கைக்கொடாமலே
சம்பத்திழந்து மாய்ந்தோன்
றக்கபெரியோர்தமை வணங்காமதத்தினாற்
றந்திவடிவா யலைந்தோன்
மாயனைச்சபையதனி னிந்தனைசெய்தொளிகணவ
மணிமுடி துணிந்து செய்ந்தோன்
னுநகுடனொடுதக்க னயிராவதன்குருடன்
மகன்வழுதி சிசுபாலனும்
ஆயுமறிவாளரொடு தேவாபணியாதனே
யவனிபுக ழருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 47

நன்னகர்.

வாவிபலகூபமுட னாறருகுசேர்வதாய்
மலைகாத வழியிலுளதாய்
வாழைகமுகொடுதெங்கு யயிராவதாய்ச்செந்நெல்
வயல்கள்வாய்க் கால்களுளதாய்

காவியமலங்குவளை சேரேரியுள்ளதாய்
கனவர்த்தகர்கண் மறைவலோர்
காணரியபலகுடிக ணிறைவுள்ளதாய்நல்ல
காவலணிழிக்கை யுளதாய்
தேவாலயமடல பாடலணிமாளிகை
சிறக்கவுள தாய்ச்சற்சனர்
சேருமிடமாகுமோ ரூர்கிடைத்ததிலதிக
சீவனமு மேகிடைத்தால்
ஆவலோடிருந்திடுவ தேசொர்க்கவாசமென்
றறையலா மருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 48

தீநகர்.

ஈனசாதிகள்குடி யிருப்பதாய்முள்வேலி
யில்லில்லி னுக்குமுளதா
யிணைமுலைதிறந்துதன் தலைவிரித்திடுமாத
ரெங்குநட மாட்டமுளதாய்க்
கானமொருபக்கமாய் மலையோரமாய்முறைக்
காய்ச்சறப்பாத விடமாய்க்
கள்ளர்பயமாய்நெடிய கயிறிட்டிறைக்கின்ற
கற்கேணி நீருண்பதாய்
மானமில்லாக்கொடிய துர்ச்சனர்தமக்கேற்ற
மணியமொன் றுண்டானதாய்
மாநிலத்தோர்தல மிருந்ததனில்வெகுவாழ்வு
வாழ்வதினு மருநரகிலே
ஆனநெடுநாள்கிடந் தமிழ்தலேசுகமாகு
மமலனை யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுர்கிரிவள
ரறப்பளீசுரதேவனே. 49

முழுக்குநாள்.

வருமாதிவாரந் தலைக்கெண்ணையாகாது
வடிவமிகு வழுகுபோகும்
வளர்திங்களுக்கதிக பொருள்சேருமங்கார
வாரந்தனக் கிடர்வரும்
திருமேவுபுதனுக்கு மிகுபுத்திவந்திடுஞ்
செம்பொனுக் குயரறிவுபோந்
தேடியபொருட்சேதமாம்வெள்ளிசனியெண்ணெய்
செல்வமுண் டாயுளுண்டாம்

பரிகாரமுளதாதி வாரந்தனக்கலரி
பௌமனுக் கானசெழுமண்
பச்சறுகுபொன்னவற் காமெருத்தூளொளிப்
பார்க்கவற் காகுமெனவே
அரிதாவறிந்தபே ரெண்ணெய்சேர்த்தேமுழுக்
காடுவாருமை மதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 50

மருத்துவன்.

தாதுப்பரீக்ஷைவரு காலதேசத்தொடு
சரீரலட் சணமறிந்து
தன்வந்திரிகும்பமுனி தேரர்கொங்கணர்சித்தர்
தமதுவாகட மறிந்து
பேதப்பெருங்குளிகை சுத்திவகைமாத்திரைப்
பிரயோக மோடுபஸ்பம்
பழையாதுமண்டூர செந்தூரலட்சணம்
பேர்பெறுங் குணவாகடம்
சோதித்துமூலிகா விதநிகண்டுங்கண்டு
தூலஸ் தலம்லேகியஞ்
சொல்பக்குவங்கண்டு வருரோகநிண்ணயந்
தோற்றியே யமிர்தகரமாய்

ஆதிப்பெருங்கேள்வி யுடையனாயுயர்வேத
னாகுமெம தருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 51

உண்மையுணர்குறி.

சோதிடம்பொய்யாது மெய்யென்பதறிவறிய
சூழ்கிரகணஞ் சாட்சியாஞ்
சொற்பெரியவாகடம் நிசமென்கைபேதிதரு
தூயமாத்திரை சாட்சியாம்

ஆதியிற்செய்ததவ முண்டில்லையென்பதற்
காளடிமையே சாட்சியா
மரிதேவதேவனென் பதையறியமுதநா
லரிச்சுவடியே சாட்சியாம்

நாதனேமாதேவ னென்பதற்கோருத்ர
நமகசமகஞ் சாட்சியாம்
நாயேனைரட்சிப்ப துன்பாரமரியயன்
னாருமர்ச்சனை செய்சரணத்

தாதிநாயகமிக்க வேதநாயகனான
வண்ணலே யருமைமதவே
ளனுதினமுமன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 52

பிறவிக்குண மாறாமை.

கலங்காதசித்தமுஞ் செல்வமுஞ்ஞானமுங்
கல்வியுங் கருணைவிளைவுங்
கருதரியவடிவமும் போகமுந்தியாகமுங்
கனரூப முளமங்கையும்

அலங்காதவீரமும் பொறுமையுந்தந்திரமு
மாண்மையு மமுதமொழியு
மானவிச்செயலெலாஞ் சனனவாசனையினா
லாகிவரு மன்றிலமேல்

நலஞ்சேருமொருவரைப் பார்த்ததுபெறக்கருதி
னண்ணுமோ ரஸ்தாளிதன்
னற்சுவைதனக்குவர வேம்புதவமேநெடிது
நாள்செயினும் வாராதுகாண்
அலங்காரமாகமலர் கொன்றைமாலிகைசூடு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 53

ஊழ்வலி.

உடலளவுரைத்திடுவ ரரிபிரமருருவமுங்
காணும்படிக் குரைசெய்வார்
காசினியினளவுபிர மாணமதுசொல்லுவார்
காயத்தி னிலைமையறியார்
விடலரியசீவநிலை காட்டுவார்மூச்சையும்
விடாமற் றடுத்தடக்கி
மேன்மேலும்யோகசா தனைகளைப்பாராட்டி
விண்மீதினுந் தாவுவார்
தொடலறியபிரமநிலை காட்டுவாரெண்வகைத்
தொகையான சித்தியறிவார்
சூழ்வினைவரும்பொழுது சிக்கியுழல்வாரது
துடைக்கவொரு நான்முகற்கும்
அடைவலவெனத்தெரிந் தளவில்பவநூல்சொல்லு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 54

ஒப்புயர் வில்லாமை.

வேதியர்க்கதிகமாஞ் சாதியுங்கனகமக
மேருவுக் கதிகமலையும்
வெண்டிரைகொழித்துவரு கங்காநதிக்கதிக
மேதினியிலோடு நதியும்

சோதிதருமாதவர்க் கதிகமாங்காந்தியு
சூழ்தனற் கதிகசுசியுந்
தூயதாய்தந்தைக்கு மேலானதெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்தகலையுந்
ஆதிவடமொழிதனக் கதிகமாமொர்ழியுநுக
ரன்னதானந் தனிலுமோ
ரதிகதானமுமில்லை யென்றுபலநூலெல்லா
மாராய்ந்த பேருரைசெய்வார்
ஆதவன்பிரமன்விண் ணவர்முனிவர்பரவவரு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 55

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும் வீணரேவீணுரை
விரும்புவோ ரிவரின்வீணர்
விருந்துகண்டில்லா டனக்கஞ்சியோடிமறை
விரகிலோ ரவரின்வீணர்
நாட்டந்தருகல்வி யில்லோரும்வீணரே
நாடியவர் மேற்கவிசொல்வார்
நானிலந்தனில்வீண ரவரினும்வீணரே
நரரைச்சுமக்குமெளியோர்
தேட்டறிவிலாதபெரு வீணரேயவரினுஞ்
சேரொருவ ரத்துமின்றிச்
செலவுசெய்வோரதிக வீணராம்வீணாய்த்
திரியுமெளியேனை யாட்கொண்
டாட்டஞ்செயும்பதாம் புயமுடியின்மேல்வைத்த
வமலனை யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே 56

உதவியின்றிக் கெடுவன.

மூப்பொருவரில்லாத குமரிகுடிவாழ்க்கையு
மூதரணி லாதநகரும்
மொழியும்வெகுநாயகஞ் சேரிடமும்வருமெதுகை
மோனையில் லாதகவியும்

காப்பகைவிலாததோர் நந்தவனமும்நல்ல
கரையிலா நிறையேரியுங்
கசடறக்கற்காத வித்தையுமுபதேச
காரணனிலாத தெளிவும்

கோப்புளவினோதமுடை யோருகுபுகழாத
கோதையர்செய் கூத்தாட்டமுங்
குளிர்புனனிறைந்துவரு மாற்றோரமதினின்று
கோடுவர்ந் தோங்குதருவு

ஆப்பதில்லாததே ரிவையெலாமொன்றுகு
மையனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 57

இவையே போதுமெனல்.

பொய்யாகவாய்மையுஞ் சீலமுஞ்சார்ந்துளோர்
பூவலஞ்செய் வேண்டுமோ
பொல்லாதகொலைகளவி லாதநன்னெறியுளோர்
புகழறஞ்செய வேண்டுமோ

நையாதகாமத்தை லோபத்தைவிட்டபேர்
நல்லறஞ் செயவேண்டுமோ
நன்மனோசுத்தியுண் டானபேர்மேலுமொரு
நதிபடிந் திடவேண்டுமோ

மெய்யானநின்னடியரைப் பரவுவோருன்பதம்
விரும்பிவழி படவேண்டுமோ
வேதியர்தமைப்பூசை பண்ணுவோர்வானவரை
வேண்டியர்ச் சனைசெய்வரோ

வெல்லரியகரடிகாட் டான்பூனைபுலிமேல்
விளங்குமிரு நாவுடும்பு
மிகவுரைசெயிவையெலாம் வலமிருந்திடமாகில்
வெற்றியுண் டதிகநலமாம்
ஒல்லையின்வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதுடை யிருத்தல்பற்ற
லொருதும்மலானையிட லிருமல்போகேலென்ன
வுபசுருதி சொல்லிவையெலாம்
அல்லறருநல்லவல வென்பர்முதியோர்பரவு
மமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 62

இதுவுமது.

கரிமயில்பசுங்கிள்ளை கோழிகொக்கொடுகாக்கை
நாவிசிச் சிலியோந்திதான்
நரையான்கடுத்தவாய்ச் செம்போத்துடன்மேதி
நாடரிய சுரபிமறையோர்
ரியுழுவைமுயலிவை யனைத்தும்வலமாயின்
வழிப்பயண மாகைநன்று
மற்றுமிவைய்யன்றியே குதிரையனுமானித்தன்
வாய்ச்சொல்வா வாவென்றிடல்
தருவளைதொனித்திடுதல் கொம்புகிடுமுடிமுரசு
தப்பட்டை யொலிவல்வேட்டுத்
தனிமணிமுழக்கெழுத லிவையெலாமூர்வழி
தனிக்கேக நன்மையென்பார்
அருணகிரணோதயத் தருணபானுவையனைய
வண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 93

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன்
றவசிசன் னாசிதட்டான்
றனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகுதலை
தட்டைமுடி மொட்டைத்தலை

சலன்கழிமடந்தையர் குசக்கலஞ்செக்கான்
கதித்ததில தைலமிவைகள்
காணவெதிர்வரவொணா நீர்க்குடமெருக்கூடை
கனிபுலா லுபயமறையோர்

நலமிகுசுமங்கலை கிழங்குரூதமங்கை
நாளும்வண்ணா னழுக்கும்
நசைபெருகுபாற்கலச மணிவளையன்மலரிவைக
ணாடியெதிர் வரநன்மையாம்

அலைகொண்டகங்கைபுனை வேணியாய்பரசணியு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 64

உணவில் விலக்கு.

கைவிலைக்குக்கொள்ளும் பாலசப்பால்வருங்
காராக் கறந்தவெண்பால்
காளான்முருங்கைசுரை கொம்மட்டிபழஞ்சோறு
காந்திக் கரிந்தசோறு

செவ்வையில்சிறுகீரை பீர்க்கத்திவெள்ளுப்பு
தென்னைவெல் லமலாவகஞ்
சீரிலாவெள்ளுள்ளி யீருள்ளியிங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக்காய்

எவ்வமில்சிவன்கோயி னிர்மாலியங்கிரண
மிலகுசுட ரிலலாதலூ
ணிவையெலாஞ்சீலமுடை யோர்களுக்காகா
வெனப்பழைய நூலுரைசெயும்

ஐவகைப்புலன்வென்ற முனிவர்விண்ணவர்போற்று
மமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 6

நற்பொருளிற் குற்றம்.

பேரானகங்கா நதிக்குமதன்மேல்வரும்
பேணமே தோஷமாகும்
யெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்களங்கமே
பெரிதான தோஷமாகும்
சீரார்ந்தபோதனர்க் கொருவர்மேல்வருகின்ற
சீற்றமே தோஷமாகும்
தீதின்முடிமன்னவர் விசாரித்திடாதொன்று
செய்வதவர் மேற்றோஷமாஞ்
தாராளமாமிடத் தந்துளோர்தாராமை
தானிரப்போர் தோஷமாஞ்
சாரமுளநற்கருப் பஞ்சாறுகைப்பதவர்
தாலஞ்செய் தோஷமாகும்
ஆராயுமொருநான் மறைக்குமெட்டாதொளிரு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை சருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 66

மணைகோல்வதற்கு மாதம்.

சித்திரைத்திங்கடனின் மணைக்கோலமலைபுகச்
செல்வமுண் டதினுநலமே
சேரும்வைகாசிக்கு மேனுளரன்புரந்
தீயிட்ட தானியாகா
வெற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம்
வீறல்ல லாவணிசுகம்
மேவிடுங்கன்னியிர ணியன்மாண்டதாகாது
மேன்மையுண் டைப்பசிக்கே

உத்தமங்கார்த்திகைக் காகாதுமார்கழியி
லோங்குபா ரதம்வந்தானா
லுயர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்தில்விட
மும்பர்கோ னுண்டதாகா
தத்தநீமாரனை யெரித்தபங்குனிதானு
மாகுமோ வருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 67

விருந்துவாரம்.

செங்கர்க்குறவுபோம் பகைவரும்விருந்தொருவர்
செயயொணு துண்ணொணுது
திங்களுக்குறவுண்டு நன்மையாம்பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந்தார்
பொங்குபுதனன்மையுண் டுறவாம்விருந்துணப்
பொன்னவற் கதிகபகையாம்
புகரவற்காகிலோ நெடுநாள்விரோதமாய்ப்
போனவுற வுந்திரும்பும்
மங்குநிகர்சனிவார நல்லதாமிதனினு
மனமொத் திருந்தவிடமே
சாலாயமாய்ப்போய் விருந்துணவிருந்துவ
வாய்த்தநா ளென்றறியலாம்
அங்கையில்விளங்கிவளர் துங்கமழுவாளனே
யண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 68

பூப்பூவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவனற்சோமனுக்
கானகற் புடையளாவா
ளங்காரகற்குவெகு துக்கியாவாள்புத்தி
யளவில்லைபங் குழவிபெறுவாள்

திருந்தகுவிழாழத்தின் மிக்கசம்பத்தினொடு
சிறுவரைப் பெற்றெடுப்பாள்
சீருடையபார்க்கவற கதிபோகவதியுமாத்
திருவுமுண் டாயிருப்பாள்
கருத்தழிந்தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவாள்
காரிவாரத்தி லாகில்
களபமுலைமடமாதர் புட்பவதியாம்வார
காலபலனென் றுரைசெய்வார்
அருத்தியுடனெளியேனை யாட்கொண்டசோதியே
யண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 69

பூப்புலக்கணம்.

வறுமைதப்பாதுவரு மேடத்திலிடபத்தின்
மாறாது விபசாரியாம்
வாழ்வுண்டுபோகமுண் டாகுமிதுனங்கடகம்
வலிதினிற் பிறரையணைவாள்
சிறுமைசெயுமிடிசேர்வண் மிருகேந்திரற்கெனில்
சீர்பெறுவள் கன்னியென்னில்
செட்டுடையசிலையெனிற் பிணியான்மெலிந்திடுவ
டேளினுக்குத் தனுசெனில்
நெறிசிதைவள்பூருவத் தபரநெறியுடையளா
நீண்மகா மானமிலளா
நிறைபோகவதிகும்ப மெனின்மீனமென்னிலோ
நெடியபே ரறிவுடையளாம்
அறிவாளர்மடமாதர் தமையறியிராசிபல
னதுவென்ப ரருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 70

தீவுங்கடலும்.

காவலந்தீவினைச் சூழ்கருங்கடலளவு
லட்சம்யோசனையிதனையே
நாடொறுஞ்சூழ்வதில் வந்தீவதைச்சூழ்ந்த
னற்கழைச் சாற்றின்கடல்
மேவுமிதுசூழ்வது குசத்தீவதைச்சூழ்தன்
மிகுமதுக் கடலதனையே
விழைவொடுஞ்சூழ்தல்கிர வுஞ்சதீவம்மிதனின்
மேற்சூழ்த னெய்க்கடலதாம்
பூவிலிதுசூழ்தல்சா கத்தீவுமிங்கிதை
போர்ப்பது திருப்பாற்கடல்
போதவதுசூழ்தல்சான் மலிதீவுமாந்தயிர்ப்
புணரியப் பாலுமப்பால்
ஆவலுறுபுட்கரத் தீவாமிதைச்சூழ்வ
தரும்புனற் றருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 71

மேலானபொருள்.

சுழிசுத்தமாயிருந் ததினும்படைக்கான
துரகமோர் மாணிக்கமாஞ்
சூழ்புவிக்கரசனு யதிலேவிவேகமுள
துறையுமோர் மாணிக்கமாம்
பழுதற்றவதிரூப வதியுமாய்க்கற்புடைய
பாவையோர் மாணிக்கமாம்
பலகலைகள்கற்றறி யடக்கமுளபாவலன்
பார்க்கிலோர் மாணிக்கமாம்
ஒழிவற்றசெல்வனு யதிலேதியாகியா
முசிதனோர் மாணிக்கமா
முத்தமகுலத்துதித் ததிலுமேமெஞ்ஞான
முடையனோர் மாணிக்கமாம்

அழிவற்றவேதாக மத்தின்வடிவாய்விளங்
கமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 72

உண்டியிலையும் முறையும்.

வாழையிலைபுன்னைமா சுடனற்குருக்கத்தி
மாப்பலாத் தெங்குபன்னீர்
மாசிலமுதுண்ணலா முண்ணுதவோவரசு
வனகஞ் செழும்பாடலம்
தாழையிலையத்தியா லேரண்டபத்திரஞ்
சகதேவ முன்முருக்குச்
சாருமிவையன்றிவெண் பாலெருக்கிச்சிலை
தனினுமுண் டிடவொண்ணுதால்
தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக்கடிபருகல்
சாதங்கள் பலவருந்தல்
சற்றுண்டன்மெத்தவு ணித்தனையுமெய்ப்பிணி
தனக்கிடமெனப் பருகிடார்
ஆழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலக
னாகுமெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 73

கவிஞர் வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை
யிணையிலாச் சேடனென்று
மீவதில்லாதகன லோபியைச்சபையதனி
லிணையிலாக் கர்ணனென்றும்
அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை
யதிவடிவ மாரனென்று
மாயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை
யாண்மைமிகு விஜயனென்று

முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சனை
மொழியரிச் சந்த்ரனென்றும்
மூதுலகிலிவ்வணஞ் சொல்லியேகவிராஜர்
முறையின்றி யேற்பதென்னே
அழலெனவுதித்துவரு விடமுண்டகண்டனே
யமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 74

கவிஞன்.

தெள்ளமிர்ததாரையென மதுரங்கதித்தபைந்
தேன்வடை திறந்ததெனவே
செப்புமுத்தமிழினொடு நாற்கவிதைநாற்பொரு
டெரிந்துரைசெய் திறமையுடனே
விள்ளரியகாவியத் துட்பொருளலங்காரம்
விரியிலக் கணவிகற்பம்
வேறுமுளதொன்னூல் வழக்குமுலகத்தியல்பு
மிக்கப்ர வண்மை
உள்ளவெல்லாமறிந் தலையடங்குங்கடலை
யொத்ததிக சபைகண்டபேர்
தோங்கலையொலிக்கின்ற கடல்போற்ப்ரசங்கம
துரைப்பவன் கவிஞனாகும்
அள்ளிவிடமுண்டகனி வாயனேநேயனே
யமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 75

நற்சார்பு.

காணரியபெரியோர்க டெரிசனம்லபிப்பதே
கண்ணிணைகள் செய்தபுண்யங்
கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்பதிரு
காதுசெய்திடு புண்ணியம்

பேணியவர்புகழையே துதிசெயலபித்திடுதல்
பேசிவாய் செய்புண்ணியம்
பிழையாமலவர்தமைத் தொழுதிடலபிப்பதுகை
பெரிதுசெய் திடுபுண்ணியம்
வீணெறிசெலாமலவர் பணிவிடைலபிப்பதுதன்
மேனிசெய் திடுபுண்ணியம்
விழைவொடவர்சொற்படி நடந்திடலபிப்பதே
மிக்கபூருவ புண்ணியம்
ஆணவமெனுங்களை களைந்தறிவினைத்தக்க
வண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 76

பிறந்தநாளோடு வருகிறவாரபலன்.

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற்
றீராதலைச்ச லுண்டாந்
திங்களுக்காகிலவெகு சுகபோசனத்தினொடு
திருமாதி னருளுமுண்டாம்
வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறிதும்
வாராது சுகமதென்பார்
மாசில்பலகலைபயில்வர் மேன்மையாம்புந்தியெனும்
வாரத் துடன்கூடினால்
நன்மைதருகுருவார மதுசேர்ந்துவரிலாடை
நன்மையுட னேவந்திடும்
நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி
நல்லவா ரத்தில்வந்தால்
அன்மருவுபீடையுண் டாமென்பர்சநியனுக்
கமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 77

இதனையுடையவர்க் கிதுவில்லையெனல்.

பொன்னாசையுள்ளவர்க் குறவேதுகுறவேது
பொங்குபசி யுள்ளபேர்க்கு
போதவேபசியேது ருசியேதுமயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையிலே

எந்நாளுமலைபவர்க் கச்சமொடுவெட்கமே
தென்றென்று முறுகலவிமே
லிச்சையுளபேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதயி ரிருந்துகொண்டே

பண்ணாளுமலைபவர்க் கிகழேதுபுகழேது
பாரிலொரு வர்க்கதிகமே
பண்ணியிடுமூடருக் கறமேதுமறமலாற்
பகர்நிரைய மொன்றுளதுகாண்

அண்ணாவருகரி யுரித்தணியுமெய்யனே
யமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 78

மறைநாட் குறிப்பு.

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்குமேனல்ல
சீரான பரணிமூலையுந்
தீதில்வைகாசியிற் பூரணைகழித்தபின்
சேருநாலா நாளினில்

ஒத்துவருமழையுமவ் வாணியிற்றேய்பிறையி
லோங்குமே காதசியினி
லொளிர்பரிதிவீழ்பொழுதின் மந்தாரமும்மழையு
முண்டா யிருந்தாடியில்

பத்திவருதேதியைந் தினிலாதிவாரமும்
பகருமாவணி மூலநாள்
பரிதியுமறைந்திடக் கனமழைபொழிந்திட
பாரில்வெகு விளைவுமுண்டாம்

அத்தனேபைங்குவளை மாலையணிமார்பனு
மண்ணலெம தருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 79

இருந்து முதவாமை.

சமயத்தி லுதவாத நிதியுமேன்மிக்கதுயர்
சார்பொழுதி லாதகிளையேன்
சபைமுகத்துதவாத கல்வியேனெதிர்வரு
சமயத்திலாத படையேன்

விமலனுக்குதவாத பூசையேஞாளுமிருள்
வேளைக்கி லாதசுடரேன்
வெம்பசிக்குதவாத வன்னமேனீடுகுளிர்
வேளைக் கிலாதகலையேன்

தமதுதளர்வேளைக்கி லாதவோர்மனைவியேன்
சரசத்திலாத நகையேன்
சாமரணகாலத்தி லுதவாதபுதல்வனென்
றரணிமீ தென்பர்கண்டாய்

அமரற்குமுனிவர்க்கு மொருவர்க்குமெட்டா
வாதியே யருமைமதவே
ளனுதினமுமனதினினை சருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 80

மறையோர் சிறப்பு..

ஓராறுதொழிலையுங் கைவிடார்சௌசவிதி
யொன்றுதப் பாதுபுரிவ
ருதயாதியிற்சென்று நீர்படிகுவார்கால
மொருமூன்றி னுக்குமறவா

தாராய்ந்துகாயத்ரி யதுசெபிப்பார்களு
மதிதிபூசைகள் பண்ணுவார்
யாகாதிகருமங்கள் மந்தரகிரியாலோ
மின்றியே செய்துவருவார்

பேராசைகொண்டிடார் வைதிகநன்மார்க்கமே
பிழையாதிருக்கு மறையோர்
பெய்யெனப்பெய்யமுகி லவர்மகிமையெவர்களும்
பேசுதற் கரிதரிதுகாண்
ஆரார்நெடுஞ்சடில வமலனேயெனையாளு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 81

அரசர் சிறப்பு.

மநுநீதிமுறைமையும் பராசர்கொண்டாட
வருமாதி கரணவீரமும்
வான்விஜயமொடுசரச சாதனவிசேஷமும்
வாசிமத கரியேற்றமும்
சனமாமமைச்சரும் பலமான துரக்கமும்
கைகண்ட போர்ப்படைஞரும்
கஜதுரகபதாதியுந் துரகப்ரவாகமுங்
காலதேசங்க ளவையும்
இனிதாயறிந்தஸ்தா னுபதிகளொடுசமர்க்
கிளையாத தளகர்த்தரு
மென்றும்வற்றாததன தானியசமுத்திரமு
மேற்றமுள குடிவர்க்கமும்
அனைவோருமெச்சவிங் கிவையெலாமுடையபே
ரரசராமருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 82

வைசியர் சிறப்பு.

நீள்கடல்கடந்திடுவர் மலையாளமும்போவார்
நெடிதுதூ ரந்திரிந்து
நினைவுதமொரூர்கள் சலியார்கள்பொருடேடல்
நிலைத்தரக புரியும்

வாளுழுவரைத்தமது கைவசஞ்செய்வார்கள்
வருமிடம் வராதவிடமும்
மனதையுமறிந்துதவி யொன்றுநூறாயிட
வளப்பம்வரு துலைதுலைக்கும்
ஆள்விடுவர்மலிவுகுறை வதுவிசாரித்திடுவ
ரளவில்பற் பலசரக்கு
மமைவுறக்கொள்வர்விற் பார்கணக்கிலணுவு
மறவிடார் செலவுவரிலோ
ஆளியொத்தேமலையி னளவுங்கொடுத்திடுவ
ரருள்வசிய ரருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுர தேவனே. 83

வேளாளர் சிறப்பு.

யசனாதிகருமமுந் தப்பாமல்வேதிய
ரியற்றிநல் லோர்பெறுவதும்
ராஜ்யபாரஞ்செய்து முடிமன்னர்வெற்றிகொண்
டென்றுநல் லோர்பெறுவதும்
வசனாதிதப்பாது தனதானியந்தேடி
வசியர்நல் லோர்பெறுவதும்
மற்றுமுளபேரெலா மிடியென்றிடாததிக
வளமைபெற் றோர்பெறுவதும்
திசைதோறுமுள்ளபல தேவாலயம்பூசை
செய்யநல் சீலர்பெறுவதும்
சீர்கொண்டபைங்குவளை மாலைபுனைவேளாளர்
செய்யுமே ழிப்பெருமைகாண்
அசைபாறுவெள்ளிமலை தனின்மேவிவாழ்கின்ற
வண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 84

தானாதிபதிமந்திரி சேனாதிபதிகளியல்பு.

தன்னரசர்வலுமையும் பரராசரெண்ணமுஞ்
சாலமேல் வருகருமமுந்
தானறிந்ததிபுத்தி யுத்தியுண்டாயினேன்
றானாதிபதியாகுவான்

மன்னவர்மனத்தையுங் காலதேசத்தையும்
வாழ்குடிபடைத் திறமையும்
மந்திராலோசனையு மெல்லாமறிந்தவன்
வளமான மதிமந்திரி

துன்னியபடைகுணம் பரிபரிபரீக்ஷையே
சூழ்பகைவர் புரிசூழ்ச்சியுந்
தோலாதவெற்றியுந் திடமானசித்தியுள
சூரனே சேனாதிபன்

அன்னையினுநல்லமலை மங்கைபங்காளனே
யனகனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 85

இராயசகருணீகர் சிறப்பு.

வருமோலையுத்தரத் தெழுதிவருபொருளினால்
வரவிடுப்போன் மனதையும்
மருவிவருகருமமுந் தேசகாலத்தையும்
வருகரதலா மலகமாம்

விரைவாயறிந்தரச ரெண்ணிலெண்ணினையள
விடனெழுத வாசிக்கவும்
வெற்றிகொண்டேபெரியபுத்தியுடையோன்புவியின்
மேன்மைரா யசக்காரனும்

கருவாயறிந்துதொகை யீராறுநொடியினிற்
கடிதேற்றிடக் குறைக்கக்
கடுகையொருமலையாக்க மலையையொருகடுகுமாக்
காட்டுவோன் கருணீகனும்

அருவாகியுருவாகி யொளியாகிவெளியாகி
யண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 36

கோயத்தின் கொடுமை.

கோபமேபாவங் களுக்கெலாந்தாய்தந்தை
கோபமே குடிகெடுக்குங்
கோபமேயொன்றையுங் கூடிவரவொட்டாது
கோபமே துயர்கொடுக்கும்
கோபமேபொல்லாது கோபமேசீர்கேடு
கோபமே யுறவறுக்குங்
கோபமேபழிசெயுங் கோபமேபகையாளி
கோபமே கருணைபோக்கும்
கோபமேயீனமாங் கோபமேயெவரையுங்
கூடாமலொருவனுக்கும்
கோபமேமறலிமுன் கொண்டுபோய்தீயநர
கக்குழியினிற்றள்ளுமாம்
ஆபத்தெலாந்தவிர்த் தென்னையாட்கொண்டருளு
மண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 37

பல்துறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும்புகழுவோர்
தங்களுக் கவைதழைவுறா
சற்றுமறிவில்லாம லந்தணரைநிந்தனைசெய்
தயவிலோ ராயுள்பெருகார்
மேன்படுநறுங்கலவை மாலைதயிர்பால்புலால்
வீடுநற் செந்நெலிவைகள்
வேறொருவர் தந்திடினு மதுமொழியறிந்தபேர்
விலைகொடுத்தே கொள்ளுவார்

தேன்கனிகிழங்குவிற கிலையிவையனைத்தையுந்
தீண்டரிய நீசரெனினுஞ்
சீர்பெறவளிப்பரே லிகழாதுகைக்கொள்வர்
சீலமுடை யோரென்பரால்
ஆன்கொடியுயர்த்தவுமை நேசனேயீசனே
யண்ணலே யருமைமதவே
ளனுதின்முமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 88

தத்துவத்திரவியம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம்
பொருந்துமிந் திரியமைந்து
பொருவில்கன்மேந்திரிய மைந்துமனமாதியாம்
புகலரிய கரணநான்கே

ஒதினோரிவையாத்ம தத்துவமெனச்சொல்வ
ருயர்கால நியதிகலையோ
டோங்கிவருவித்தைரா கம்புருடன்மாயையென்
றுரைசெய்யு மோரேழுமோ

தீதில்வித்யாதத்வ மென்றிடுவரிவையலாற்
றிகழ்சுத்த வித்தையீசன
சீர்கொள்சாதாக்கியஞ் சத்திசிவமைந்துமே
சிவதத்வமென் றறைகுவார்

ஆதிவடநீழலிற் சனகாதியர்க்கருள்செ
யண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 89

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியதும்.

வனசஞ்செழுஞ்சூத முடனசோகந்தளவ
மலர்நீல மிவையைந்துமே
மாரவேள்கணைகளா மிவைசெயுங்குணமுளரி
மனதிலாசையை யெழுப்பும்

வினவிலொண்சூதமலர் மெய்ப்பசலையுண்டாக்கு
மிகவசோகந் துயர்செயும்
வீழ்த்திடுங்குளிர்முல்லை நீலமுயிர்போக்கிவிடு
மேவுமிவை செயுமவத்தை
நினைவிலதுவேநோக்கம் வேறொன்றிலாசையற
நெட்டுயிர்ப் பொடுபிதற்ற
னெஞ்சந்திடுக்கிடுத லனம்வெறுத்திடல்காய்ச்ச
னேர்தன்மௌனம்புரிகுதல்.
அனையவுமிருண்டில்லை யென்னவீரைந்துமா
மத்தனே யருமைமதவே
ளனுதினமுமன்றினிலை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 90

மன்மத னுபகரணங்கள்.

வெஞ்சிலைசெழுங்கழைவி னாரிகருவண்டின
மேல்விடுங் கணைகளலராம்
வீசிடுந்தென்றறேர் பைங்கிள்ளையேபரிகள்
வேழங் கெடாதவருளாம்
வஞ்சியர்பெருஞ்சேனை கைதையுடைவாணெடிய
வண்மைபெறு கடன்முரசமாம்
மரகம்பதாகைவரு கோகிலங்காளகம்
மனதே பெரும்போர்க்களம்
சஞ்சரிகைவிசைபாடல் குமுதனேயன்கவிகை
சாரிரதியே மனைவியாந்
தறுகண்மடமாதர்கள முலைமகுடமாமல்கு
தவரு திருக்குமிடமாம்
அஞ்சுகணைமாரவேட் கென்பரெளியோர்க்கெலா
மமுதமே யருமைமதவே
ளனுதினமுமன்றினிலை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 91

பகைகொளத் தகாதவர்.

மன்னவரமைச்சர் துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறுத மர்மமுடையோர்
வலுவர்கருணீகர்மிகு பாகஞ்செய்தன்னமிடு
மடையர்மந் திரவாதியர்
சொன்னமுடையோர்புலைய ருபதேசமதுசெய்வோர்
சூழ்வயித்தியர் கவிதைகள்
சொற்றிடும்புலவரிவர் பதினைந்துபேரொடுஞ்
சொற்பனந் தனிலாகிலும்
நன்னெறியறிந்தபேர் பகைசெய்திடார்களிந்
நானிலத் தென்பர்கண்டாய்
நாரியோர்பாகனே வேதாகமும்பரவு
நண்பனே யன்பர்நிதியே
அன்னமூர்பிரமனுங் கண்ணனுங்காணாத
வண்ணமே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 92

இதாகிதஞ்செய்து பயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச்
சொலனுநன் னெல்லையெள்ளை
தூயதெங்கின்கனியை யெண்ணைததுட்டரைத்
தொண்டரைத் தொழுதொழும்பை
நவைதீருமாறுகண் டித்தேபயன்கொள்வார்
நற்றமிழ்க் கவிவாணரை
நலமிக்கசெழுமலரை யோவியமெனத்தக்க
நயமுள்ள நாரியர்தமைப்
புவிமீதிலுபகார நெஞ்சரைச்சிறுவரைப்
போர்வீர ரைத்தூயரைப்
போதவும்பரிவோ டிதஞ்செய்யமிகுபயன்
புகழ்பெறக் கொள்வர்கண்டாய்

அவமதிதவிர்த்தென்னை யாட்கொண்டவள்ளலே
யண்ணலே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 93

தருமம்.

பெறுமில்பெருவிக்கலொடு நாளோலைநாடொறும்
பிள்ளைக ளருந்திடும்பால்
பேசரியசந்திர மடமாவுரிஞ்சுதல்
பெண்போக நாவிதவண்ணன்

மறைமொழிகளுடி தண்ணீர்தலைக்கெண்ணெய்பசு
வாயினுறை பிணமடக்கல்
வாவியிலுமுயிர்மீட்ட றின்பொருளடைக்காய்
வழங்கல்சுண்ணாம்புதவுதல்

சிறையுறுபவர்க்கமுது வெற்றிலங்காத்தல்பொழில்
செய்தல்முன் னூலின்மணந்
திகழ்விலங்கூண்பிச்சை யறுசமயருக்குண்டி
தேவராலய மவுஷதம்

அறைதல்கற்போர்க்கன்ன நாலெட்டறங்களுமு
னன்னைசெய லருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 94

இல்லறம்.

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச்
சன்மார்க்க முன்மனைவியைத்
தவறாதசுற்றத்தை யேவாதமக்களைத்
தன்னைநம்பி வருவோர்களைத்

சிந்தைமகிழெய்தவே பணிவிடைசெய்வோர்களைத்
தென்புலத்தோர் வறிஞரைத்
தீதிலாவதிதியைப் பரிவுடையதுணைவரைத்
தேனுவைப் பூசுரர்தமைச்

சந்ததஞ்செய்கடனை யொன்றுமிவைபிழையாது
தான்பரிந்திடலில்லறஞ்
சாருநலமுடையராங் துறவறத்தோருமிவர்
தம்முடன் சரியாயிடார்
அந்தரியுயிர்க்கெலாந் தான்தனிலுநல்லனட்
கன்பனேயருமை மதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுதேவனே. 95

புராணம்.

தலைமைசேர்பௌடிக மிலிங்கமார்க்கண்டமெழில்
சாரும்வா மனமச்சமே
சைவம்பெருங்கூர்மம் வரும்வராகங்காந்த
சரிதமே பிரமாண்டமும்
நிலைமைசேரிப்பத்து முயர்சிவபுராணமா
நெடியமால் கதைவைணவம்
நீதிசேர்காருட நாரதம்பாகவத
நீடிய புராணநான்காம்
கலைவலர்சொல்பதுமமொடு பிரமகைவர்த்தமே
கமலாலயன் காதையாம்
கதிரவன்காதையே சூரியபுராணமாங்
கனல்காதை யாக்கினேயம்
அலைகொண்டநதியும்வெண் மதியுமுறுரும்புனையு
மத்தனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 96

புகழ்ச்சி.

பருகாதலமுதொருவர் பண்ணாதபூஷணம்
பாரின்மறையாத நிதியம்
பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத
பண்புடைய பங்கேருகம்
கருகாதபுயல்கலைக ளருகாததிங்கள்வெங்
கானிலுறை யாக்கினேயங்

கருதரியவிக்குண மனைத்துமுண்டானபேர்
காசினியி லருமையாகும்
தெரியவுரைசெய்யின்மொழி கீர்த்திவருகலவியொடு
சீரிதய மீகைவசனந்
திடமானவீரமிவை யென்றறிகுவார்களிச்
செகமெலாங் கொண்டாடவே
அருள்கற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரை
யாகுமெம தருமைமதவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 76

திருமாலவதாரம்.

கோமுகாசூரனைமுன் வதைத்தமரர்துயர்கெடச்
சுருதிதந்தது மச்சமாஞ்
சுரர்களுக்கமுதீந்த தாமையாய்பாய்போற்
சுருட்டிமா நிலமெடுத்தே
போமிரணியாக்கதனை யுயிருண்டதேனமாம்
பொல்லாத கனகனுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந்தோங்கியது
புனிதவாமனமூர்த்தியாம்
எழுறுமிராவணனை வென்றவனிராகவ
னிரவிகுலம் வேரறுத்தோ
னேர்பரசிராமன்வரு கண்ணனொடுபலராம
னிப்புவிபயந் தவிர்த்தோர்
ஆனியகற்கிபிணி மேல்வருவதிவைபத்து
மரிவடிவ மருமைமதவே
அனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீசுரதேவனே. 86

சிவமூர்த்தி

பிறைசூடியுமைநேசன் விடையூர்திநடமிடும்
பெரியனுயர் வதுவைவடிவன்
பிச்சாடனன்காம தகனன்மறலியைவென்ற
பெம்மான் புரந்தகித்தோன்

மறமலிசலந்தரனை மாய்த்தவன்பிரமன்முடி
வெளவினோன் வீரேசுரன்
மருவுநரசிங்கத்தை வென்றவரனுமைபாகன்
வனசரன் கங்காளனே
விறன்மேவுசண்டேச ரக்ஷகன்கடுமாந்தி
மிக்கசக்கர முதவினோம்
விநாயகர்க்கருள்செய்தோன் குகனுமையுடன்கூடி.
மிளிரேக பரதன்சுகன்
அறிவரியதக்ஷிணா மூர்த்தியொடிலிங்கமா
மையனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 99

கவி வணக்கம்.

மலரிதழிபைங்குவளை மென்முல்லைமல்லிகை
மருக்கொழுந் துயர்கூவிளம்
மற்றுமுளவாசமலர் பத்திரஞ்சில்சூடி
மணிமுடி தனிற்பொறுத்தே
சிலெருக்கொடுவனத் துட்பூளைபஞ்சறுகு
செம்முள்ளி மலர்சூடவே
சித்தம்வைத்திடவுமங் கீகரித்திடுமகா
தேவதேவா தெரிந்தே
கலைவலருரைக்குநன் கவியொடம்பலவாண
கவிராய னருமென்புன்
கவியையுஞ்சூடியே மனமகிழ்ந்திடுவதுன்
கடனாகு மடனாகமும்
அலைபெருகிகங்கையுஞ் செழுமதியமும்புனையு
மமலனே யருமைமதவே
ளனுதினமுமனதினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுரதேவனே. 100

அறப்பளீசுர சதகம்-முற்றிற்று.

மலசுத்தி லேகியம்.

இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு, யெப்போதும் வயிற்றில் கோளாறாகவேயிருந்தால் மலச்சிக்கல், மலம்வரட்சி வயிற்றிலுள்ள எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாடம் மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியகோட்டீசில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

எனது பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ.,

'ஸாயனவிலாஸ்',
பிரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்.

மலசுத்தி லேகியம்.

இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு; யெப்போதும் வயிற்றில் கோளாராகவேயிருந்தால் மலசிக்கல், மலம்வரட்சி வயிற்றிலுள்ள எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாட மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியகோட்டிசில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

எனது பெரிய கேட்லாக் வேண்டுமானால் **அரையணாஸ்**டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ.

'நாராயணவிலாஸ்'

பிரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்.